ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

பிரத்தியக்ஷமொன்றே பிரமாணமென்றும், அதனால் தெரிந்துகொள்ளக்கூடியவைகளைத்தான் அங்கீகரிக்கவேண்டுமென்றும், மற்ற பிரமாணப்பிரமேயம் முதலிய எவையுங் கிடையாதென்றும் சார்வாகர் முதலிய நாஸ்திகர் சொன்னபோதிலும் தத்துவ ஆராய்ச்சிசெய்கின்றவர் இதைக் கேட்பதில்லை. ஆனால் அவர்கள் பிரத்தியக்ஷம்போல அனுமான ஆகமாதிகளும் பிரமாணங்களேயென்றும் அதனால் தெரிந்துகொள்ளக்கூடிய லோகாந்தரம், மறுபிறப்பு, புண்ணியம், பாபம், ஆன்மா, ஈசுவரன் முதலியவைகளையும் அங்கீகரிக்கவேண்டுமென்றும், பிரமாணபூர்வகமாயும், யுக்தியுக்தமாயும் ஸாதிக்கின்றார்கள். அதில் பிரத்தியக்ஷானுமானங்களால் ஸித்திக்காதவைகளையெல்லாம் சப்தமெனப்படும் ஆகமப்பிரமாணம் ஸாதிக்கும். அந்த சப்தம் லௌகிகமென்றும், வைதிகமென்றும் இரு வகைத்தாகும். லௌகிகசப்தம் உச்சரிக்கின்றவர்களின் யோக்யதையைப் பொருத்து பிரமாணமாகின்றது. வைதிகசப்தமோவெனில் எப்பொழுதும் அப்பிரமாணமாகப்போகிறதில்லை. தற்காலத்தில் சிலர் அந்த வைதிக சப்தங்களையும் பிரமாணமில்லை என்று ஸாதிக்கப் பாடுபடுகின்றார்கள். அதற்கு வைதிகர்கள் இடங்கொடுக்கவில்லை. அதனால் அவைதிகர்களது முயற்சி முழுவதும்பயன்படவில்லையாயினும் ஆராய்ச்சிக்குறைந்த சிறுவர்களிடம் சில முயற்சி பலித்துவிடுகிறது. அதனைவிலக்கி நமது ஸனாதன வைதிகதர்மத்தை ஸ்தாபனஞ்செய்வது கஷ்டத்திலும் கஷ்டமாகின்றது. வைதிகமான யாகாதிகளையும் தூஷிக்கின்றாரென்றால் மற்றவைகளைப் பற்றித் தூஷிப்பார்களெனக்கேழ்க்கவும் வேண்டுமோ? பெரும்பாலும் விருத்தாந்தபத்திரிகைகளும், துண்டுப்பிரசுரங்களும் அவர்களுக்கிணைந்ததுபோல் நிற்கின்றன. வைதிகர்களது வைதிகாசாரத்தைப் பிரசுரிக்கவும் அவைதிக அனாசாரங்களை நிராகரிக்கவும் போதுமானபத்திரிகைகளுமில்லை. ஒன்றிரண்டிருப்பினும் அவைகளையாதரிப்பவருமில்லை. ஆயினும் சில வைதிகரது பிடிவாதத்தால்மட்டும் அதார்மிகப்பிரவிருத்திகள் சிலவிடத்தில் தலையெடுக்கவில்லைஎன்பதையறிந்து தார்மிகர்கள் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அது போதாது. நமது வேதவித்தியை முன்போல் ஓங்கிவளர்ந்து வைதிகாசாரங்கள் சிறப்பாக நடைபெற்று நாடெங்கும் ஸுபிக்ஷமாகச் செழித்தோங்கும்படி இறைவனருள்புரிவாராக.

பத்திராதிபர்,

## வேதம்.

பாஷையென்பது அவசியமெனப்பட்டது. அந்த பாஷை வைதிகமென்றும் லௌகிகமென்றுமிருவகைத்தாயிருப்பதற்குள் லௌகிகபாஷை ஸம்ஸ்கிருதபாஷையென்றும் அஸம்ஸ்கிருத பாஷையென்றுமிருவகைத்தாகும். அஸம்ஸ்கிருதபாஷையைப் பற்றிப் பின்னிட்டுக்கூறுவோம். ஸம்ஸ்கிருதபாஷைக்குப் பெரியதோர் அலங்காரமாய் நிற்பதாம் வைதிகபாஷை என்ற வேதம்; இது வேறு பாஷைகள்போல் இடத்தால் அல்லது காலத்தால் அளவிடப்படமாட்டாது. அதாவது இத்தேசத்திலுண்டாயிற்றென்றும் இக்காலத்திற் பிறந்ததென்றும் சொல்லக்கூடாதது. அதனாற்றான் இவ்வேதத்தை இயற்றிய புண்ணியவான் இவன் என்று ஒருவனும் இன்றுவரை துணியப்பட்டானில்லை. அதுகொண்டே சில அறிஞர்கள் இதற்குக் கர்த்தா பரமேசுவரன் என்றும் மற்றுஞ்சிலர் அனாதியென்றும் கூறுவர். இதன் பெயராலேயே 'அறிவு கொடுக்குங் கருவி இது' எனப்பொருளேற்படுதலால் இது ஞானநூல்களில் முதன்மைபெற்றதென சான்றோர் வழங்குவது வழக்கம். அவ்வேதமனந்தமாம். அதாவது "தேவமானத்தில் முன்னூறுவருஷம் வேதாத்தியயனம் செய்து கிருகம் சென்ற பாரத்வாஜமுனிவரை மறுபடி தேவேந்திரன் அழைத்து, உமக்கு இன்னும் நூறுவயது தந்தோம் அதுகொண்டு தாம் செய்யும் வேலை யாது என்று வினவ, அவர் பிறகும் வேதமோதுவதே எனது வேலை என விடையளித்தார். அதைக்கேட்ட தேவராஜா இதுவரையில் இம்முனிவர் ஓதியுணர்ந்த பாகங்களெல்லாம் மூன்று கைப்பிடிகளிலடங்கத்தக்கவைகளேயாகும். இவர் கற்காதபாகம் மலைகள்போல் மிஞ்சியிருக்கின்றன, எவ்வளவு ஆயுளைக் கொடுத்தாற்றானென்ன? கற்கமுடியாதெனக்கருதி அவருக்கு மூன்று மலைகளாகக்காட்டி ஓ முனிசிரேஷ்டா! இவ்வளவுகால

மாக உம்மால் கற்கப்பட்ட பாகம் கைப்பிடிக்குள் அடங்கியதே யாகும். கற்கப்படாத பாக்கி பாகம் மலைபோல் கிடக்கின்றது பாரும் எனச்சொல்லி அவருக்கிருந்த வேதசிரத்தைக்காக ஸகல வேதங்களும் ஸ்புரிக்கும்படி அனுக்கிரஹித்தார்" என்று ஓர் இதிஹாஸம் வேதத்திலேயே காணப்படுகின்றது. இவ்வாறு பிரிவின்றிப்பெரிதான இவ்வேதத்தையெல்லாம் ஒரு மனிதன் கற்க முடியாதுபற்றி அது அனேக சாகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றுள் எந்த சாகை எவர்களது முன்னோர்களால் வம்சபாரம்பரையாய்க் கற்கப்பட்டுவந்ததோ, அது அவர்களுக்கு ஸ்வசாகையாகும். அதைத்தான் முதலில் அத்தியயனம் செய்ய வேண்டும். அப்படிச்செய்யாமல் வேறு சாகையை அத்தியயனம் செய்தால் சாகாரண்டனெனப்படுவான். அது தோஷமாம் ஆனால்ஸ்வசாகையை அத்தியயனம்செய்துவிட்டுவேறு வேதாபகங்களை அத்தியயனம் செய்யவேண்டும். இவ்வாறு வைதிகபாரம்பரை அழிந்துபோகாமல் ஒவ்வொருஆர்யவம்சத்திலுதித்தவனும்தன்னாலியன்றவரை ஸ்வசாகையைக் கண்டிப்பாய் அத்தியயனம்செய்துவரவேண்டும். முழுமையும் அத்தியயனம் செய்யமுடியாவிடினும் சில பாகத்தையேனும் அத்தியயனம் செய்து பெரியோர்களது பிரஸாதத்திற்குப் பாத்திரமாகி க்ஷேமத்தையடையவேண்டும்.

பத்திராதிபர்.

---

பிருஹதீச்சுவரமான்மியம் என்னும்

## சோழமன்னர்களின் சரித்திரம்.

(464-வது பக்கத்தொடர்ச்சி.)

வணிகர்கள்:- நாங்கள் லிங்கங்கொண்டுவருமாறு அரசனுலாணையிடப்பட்டிருக்கின்றோம். உம்மருளால் எங்களுக்கு வழி நடுவே இடையூறின்றிருக்கட்டும்.

இவ்வேண்டுகோளைக்கேட்டதும் தெற்குமுகமாயுள்ள அக்கணபதி மேற்குமுகமாகத் திரும்பிநின்று அவர்களைநோக்கிக் கூறலானார்.

கணபதி:— என் ஸன்னதியில் வஸிக்கும் நீங்கள் சிறிதும் விசாரமின்றி செல்லுங்கள். நானே அந்த லிங்கமேற்றிய வண்டியைத் துதிக்கையால் இழுத்துவிடுகிறேன்.

இதுகேட்ட அரசன் எல்லோரோடுந்தொந்திக்கணபதியை வணங்கி தன்னுசாரேடும் அவ்வணிகர்களோடும் நர்மதையடைந்தான். அங்கு ஓங்காரகுண்டத்தில் ஸ்நாநம் செய்கையிலிரண்டு லிங்கங்கள் கிடைத்தன மறுபடியும் கிடைத்த மூன்ருவது லிங்கத்தைக் கரையில் வைத்துப் பூஜிக்கவே அஃது மிக்க விருத்தியடைந்தது. அதைக்கண்டு ஆச்சரியமடைந்த வேந்தன் பூக்களாலலங்கரிக்கப்பட்ட மண்டபத்தையுடைய, ஓர் வண்டியில் அந்த லிங்கத்தை எற்றி,

नानावाद्यादिघोषैश्च विप्राणां स्वस्तिवाचनैः :

பலவித வாத்தியகோஷங்களுடனுமந்தணர்களின் மறையோசையுடனும் ஆறுமாதத்திற் காவேரியின் தென்கரையிலுள்ள தன் பட்டணத்தையடைந்தான். பிறகு அவ்வாசன் வாஸத்தினுலேயே பாவத்தைப்போக்கும் சமீவனமடைந்து அங்கு தஞ்சேசரின் முன்னிலையில் அந்த லிங்கத்தை வைத்து சிவத்விஜர்களால் பஞ்சாமிருதஸ்நாந தூபதீப நைவேத்தியங்களுடன் ஆராதித்துவரச்செய்தான். பொருள்களாலும், தான்யங்களாலும், வஸ்திரங்களாலும் அவ்வணிகர்களை வெகுமதித்தான். அந்த லிங்கத்தை ஆலயத்தில் வைத்தபிறகு அவ்வேந்தனும் தன் மனைவியோடும் ஆசாரேடும் பட்டணத்துட் சென்ருன்.

## 15 அத்தியாயம்,

ஸூதர்:— பிறகு பூலோகமடைந்த விசுவகர்மாவைப்போலுள்ள ஸோமவர்மாவென்னுஞ் சிற்பத்தலைவன், பல சிற்பிகளைக் கொண்டு பூமியைவெட்டச்செய்து கற்களையெல்லாங்குவித்துக் கொண்டு சிறந்த பல விருஷபங்களால் நிறையப்பெற்ற மதில் சுவற்றையும் வெளிகோபுரமிரண்டையுஞ் செய்துமுடித்தான். இவ்வாறு அவன் அனேக ஆயிரஞ்சிற்பிகளுடன் அவ்வாலயத்தைச் செய்துவருகையில் பன்னிரண்டு வருஷங்களாயின. ஸோமவர்மாவை அரசன் அழைத்துவருகையில் அச்சிற்பியின் மனைவி பூர்ணகர்ப்பவதியாகவிருந்து பிறகு ஓர் புதல்வனைப் பெற்றெடுத்தாள். அம்மகனுக்கு இப்பொழுது வயது பன்னிரண்டாயிற்று. அவன் சிற்பநூல்களை நன்கு பயின்று தன் தந்தையின் முறையையே கையாண்டுவந்தான். ஒருநாள் அச்சிறுவன் கற்களைச்செதுக்கும் உளியைக் கையிலேந்தி அன்னை

யிடஞ்சென்று வணங்கி தகப்பன் எங்கு சென்றிருக்கிறாரென வினவினான். அம்மாது புத்திவன்மைபொருந்திய தன் மகன் சிற்பத்தில் மிக்கத்தேற்சிகொண்டிருப்பதைக்கண்டு களித்து தழுவி முத்தமிட்டு வழிசெல்லத் தயிருஞ்சோருங் கட்டிக் கொடுத்து 'ஏ மகனே! உன் தந்தை உயர்ந்ததோர் கோபுரம் செய்யத் தஞ்சாபுரம் சென்றிருக்கிறார். அங்கு சோழமன்னனால் நன்கு வெகுமதிக்கப்பட்டு இன்னும் வசித்துவருகிறார். நீயும் அங்குசென்று அவ்வரசனிடமிருந்து உனக்குவேண்டிய பொருள்களைப் பெறுவாயாக' என்று கூறினள்.

அதுகேட்ட அம்மகன் அன்னையைவணங்கி விடைபெற்றுக் கொண்டு பத்துதினங்களில் அவ்வூரையடைந்தான். அச்சிறுவன் அங்கு பல்லாயிரஞ் சிற்பிகளாற்செய்துவைக்கப்பட்டிருந்த கோபுரத்தின் அஸ்திவாரபீடத்தை உற்றுநோக்கி தன் கையிலிருந்த அளவுகோலாலதனையளவிட்டுப்பார்த்து அங்கு கவனித்துக் கொண்டு நின்ற அரசனினமைச்சனைநோக்கிக் கூறலானான்.

பாலசில்பி:— இப்பீடத்தினளவை வைத்து கோபுரநிர்மாணஞ் செய்யின் அது பெருங்காற்றுமழைகளாலடிக்கடி விழநேரிடும், எந்தச்சிற்பி இதனைச்செய்தான்? அவன் சிற்பத்திற் தேர்ச்சியுற்றவனாக எனக்குத் தோன்றவில்லை.

இதனைச்செவியுற்ற மந்திரிகளரசனிடம் இரகசியமாகயறிவித்தனர். அவ்வேந்தனும் அச்சிறுவனையழைத்து 'நீ யார்? எவ்வழியே வந்தாய்? எவ்வாறு கட்டுவித்தால் கோபுரமுறுதியாகவிருக்கும்' என வினவினான். இதற்குப்பீடத்தினுள் அளவை அமைத்துக் கோபுரம் கட்டுவித்தால் உறுதியாயிருக்கும் எனப் பதிலளித்தான்.

இவ்வாறுஅரசனும் பாலசிற்பியும் பேசிக்கொண்டிருக்கையில் எல்லா விருத்தாந்தத்தையும் சிற்பிகள் ஸோமவர்மாவிட முறைத்தனர். அப்பொழுது அச்சிற்பத்தலைவன் பக்ஷ்யபோஜ்யங்களை விஷங்கலந்து தயார்செய்து வைத்துக்கொண்டு அச்சிறுவனை சீக்கிரம் அழைத்துவரக் கட்டளையிட்டு 'அவன் யார்? எங்கிருந்து வந்தான்' என்று சிற்பிகளையடிக்கடி வினவிக்கொண்டேயிருந்தான். அரண்மனைவாயிலிற் காத்திருந்த சிற்பிகள் வெளிவந்தவுடன் பாலசிற்பியை ஸோமவர்மாவிடம் அழைத்துச்சென்றனர்.

ஸோமவர்மாவும் தன் கையிற் செதுக்குளியுமளவுகோலும் வைத்திருப்பவனும் பௌருஷத்தாற் பிரகாசிக்கின்றவனுமான அச்சிறுவனைக்கண்ணுற்று 'குழந்தாய்! களைத்திருக்கிறாய் நீ யார்? எங்கிருந்து வந்தாய்' என்று மனத்துள் தகிக்கும் கோபத்தை வெளியிடாமல் கூறினான்.

அதற்காக பாலசிற்பி 'அப்பா! செய்தவேலை நன்றாகவில்லை. அரசன் பொருள்கள் வீணாகச் செலவிடப்பட்டன. இவ்வாறு நிர்மாணஞ்செய்யின் உயர்ந்த கோவில் நீடித்திராது' என பதில் அளித்தான்.

அதைக்கேட்ட சிற்பத்தலைவன் 'நீ வயதிற் சிறியவனாகவிருப்பினும் அறிவிற் முதிற்சிபெற்றவனாகவும் சிற்பசாஸ்திரத்தில் நல்ல தேர்ச்சியுடையவனாகவுமிருக்கிறாய். நான் வயதில் முதிற்சியடைந்திருப்பினும் அங்குளிமானங்கூட ஸரியாக அறியேன். ஆதலால் நான் எவ்வாறு செய்யவேண்டும் என்பதைக் கூறு' என்று வினவினான்.

அதற்கு அச்சிறுவன் 'உம்மிடமிருந்தே நான் இக்கல்வி பெற்றேன். இருப்பினும் என்னறிவிற்கெட்டியதைக்கூறுகிறேன். சுற்றுப்புறம் இருபது அங்குலங்கள்விட்டு உள்பீடத்தையமையுங்கள். அவ்வாறு செய்யின் என்றுமழியாது, அரசன் பட்டபாடும் வீணாகாது. அவனுக்குதவுவதாற் சிவனுஞ் சந்தோஷமடைவர். சங்கரர் நமக்குங்கைலாஸவாஸமளித்தருள்வார்.

அதனை ஸோமவர்மா செவியுற்று, 'இதுமுதற் சிற்பிகளை நீயே வேலை ஏவுவாயாக' எனக்கூறி சிற்பிகளெல்லோரையும் அழைத்து அச்சிறுவன்முன் கணக்குகளை எடுத்துரைத்து, 'இனி நீங்கள் இச்சிறுவன்கட்டளைக்கிணங்கி நடப்பீர்களாக, நான் காலையிலும், மத்தியானத்திலும், மாலையிலும் உங்கள் சிற்பத்தைக் காணவருகிறேன்' என உத்திரவளித்தான்.

அவர்களும் அக்கட்டளையையேற்றுக்கொண்டு அதன்படியே நடந்துவந்தனர். உடனே நீலீஸூத்திரத்தால் (नीलीसूत्रम्) கற்களை அளக்கவாரம்பித்தான். அச்சிறுவன் சுண்ணாம்புவேலைக்காரர்களும், யந்திரவேலைக்காரர்களும், சாங்கவேலைக்காரர்களுமான பதினாயிரக்கணக்கான உயர்ந்த சிற்பிகளையாணையிட்டுவந்தான்.

हरितकी गुहरस कतक क्रमुकै रसैः ।
केशप्रमाणं पाषाणसन्धि ससुधया व्यधात् ॥

மயிரிழையளவுள்ள கற்கள் பொருந்துமிடங்களை கடுக்காய், வெல்லம், தேத்தங்கொட்டை, பாக்கு இவைகளின் ரஸங்களுடன் கலந்த சுண்ணாம்பினாற்பொருந்தச்செய்தான். வெண்ணையொத்த சுண்ணாம்பினாற் கற்களைப் பொருத்துகின்ற சிற்பிகளின்டங்கத்தினொலி இடியோசையையும் மறைத்தது. பாலனும் தன் தந்தை வியக்குமாறு கோபுரத்திற் தன் சிற்பத்தேற்சியைக் காட்டினான்.

அரசனும் இச்செய்திகேட்டு அவ்விருவர்களுந் தந்தைதநயனென்றுமறிந்து, ஆடையாபரணங்களாலுபசரித்தான்.

ஸூதர்:—

तत्रैका जरती वृद्धा श्रमणी भस्मभूषणा ।
शिल्पीन्पर्यचरन्भक्त्या ह्यन्नताम्बूल दानतः ॥
एवं द्वादशवर्षाणि शिल्पं तेषां प्रकुर्वताम् ।
सा प्रार्थयत्तदा वृद्धा शिलाखण्डं गृहे मम ॥
शिवकैङ्कर्यकरणे योजयध्वं यथाविधि ।
तेन मे प्रीतिरतुला जायते नात्र संशयः ॥

அங்கு திருநீறை அணியாகக்கொண்ட ஓர் விருத்தஸன்யாஸினீ இவ்வாறு பன்னிரண்டுவருஷங்களாகச் சிற்பஞ்செய்துவருஞ் சிற்பிகளுக்கு அன்னதாம்பூலங்களளித்து சுச்ரூஷை செய்துவந்தாள். என்வீட்டில் ஓர் கருங்கல் கிடக்கிறது, அதனையும் புண்யமான சிவகைங்கர்யத்திற்கு விதிப்படி சேர்த்துக்கொள்ளுங்கள். அதனால் எனக்கும் அடங்கா வாநந்தமுண்டாகும் என்பதற்கையமில்லை எனவுரைத்தாள்.

சிற்பிகளும் அக்கிழவியின் வேண்டுகோளுக்கிணங்கி, மழமழப்பான கருங்கல்லை சிவனின் தலைக்கு நேராக இருக்குமாறு கோவிலின் நடுவே வைத்துக் கட்டினான். இவ்வாறு விச்வகர்மாவின் வம்சமாகிய ஸோமவர்மா தன் மகனுடனும் பதினாயிரம் சிற்பிகளுடனும் ஸந்திகளிற் சுண்ணாம்பை வைத்துப்பன்னிரண்டு வருஷங்களின் முடிவில் கோவிலைக் கட்டிமுடித்தனர்.

மிக்கவும் அடங்கா ஆனந்தமடைந்தவனும், குருவாகிய ஹர தத்தருடன் கூடியவனுமான அம்மன்னன், வணிகர்களைக்கொண்டு லிங்கத்தை இழுத்துவருமாறு மந்திரிகளைக் கட்டளையிட்டனன். லிங்கத்தை இழுத்துவருவதில் ஊக்கமுடையவர்களும், 64 வீடு களில் வசிக்கின்றவர்களுமான அவ்வணிகர்கள் தஞ்சேசரின் ஆல யத்தினின்றும் பிருஹதீசரென்னும் அவ்வுத்தம லிங்கத்தைப் பெரிய சக்கரங்களிலேற்றி,

महद्भिर्गेयवाद्यैश्च पुष्पवर्षैः पदे पदे ।
वेदघोषैर्महद्भिश्च वेश्यानर्तनकैरपि ॥

பலவித வாத்தியங்களுடனும், கம்பீரமான வேதகோஷங்களுட னும், பணிப்பெண்களின் பாடல்களுடனும் பூக்களைச்சொரிந்து கொண்டும், அரசன் ஆணைப்படி இழுத்துவந்தனர். அவர்கள் மிகப்பெரியதான அந்த லிங்கத்தை உயரமான கர்ப்பக்கிருஹத் தில் வைத்தனர். அங்கு வைத்ததும் அப்பிருஹதீசரென்னும் லிங்கம் நன்ருய் பாதாளம் வரையிலடியிற்பதிந்துவிட்டது. அப் பொழுது அச்சிற்பத் தலைவன் பிராம்மணர்களால் குறிக்கப்பட்ட நல்ல வேளையில் பிரும்மபீடம் மேடை இவைகளை அஷ்டபந்தன விதிப்படி செய்துமுடித்தான்.

அச்சிற்பி பஞ்சவர்ணங்களாலும் கோபுரத்தை அழகுபெறச் செய்தான். சங்கரனின் முன்னிலையில் திவ்யமான மண்டபங் களை நிர்மாணஞ் செய்தான். தேவி பிருஹதம்பிகை ஸோமாஸ் கந்தர், நடேசர், சண்டேசர், கணேசர் முதலியவர்களினாலயங்களை யுங்கிரமமாகவே செய்துமுடித்தான்.

ஓர் நாள் கரிகாலனென்னுஞ் சோழமன்னன் சிவாலயத்தைக் காணத் தனிமையாக வந்து சிற்பத்தில் மும்மரமாகவிருந்த அப் பாலசிற்பியின் பின்புறத்தில் மறைந்துநின்ருன்.

சாப்பாடு முடிந்ததும் அச்சிறுவனுக்குத் தாம்பூலப்பட்டி கொடுத்தாள். கற்பூர கந்தம்வாய்ந்த அப்பட்டியை வாங்கிய சிற்பி தன் வாயிற்போட்டுக்கொண்டான். அப்பொழுது தன் பின்

நின்ற, அரசனைக்கண்டு பயத்தால் நடுக்கமுற்று, உடனே எழுந்து பணிந்து, மன்னிக்கவேண்டுமென்று அரசனை வேண்டினான். நானென் சிற்பத்தின் சிறப்பைக் காட்டுகிறேன். தாங்கள் பொருத்தருளவேண்டும். மிக்க விசித்திரமாகச் சுப்பிரமணியாலயத்தை அமைக்கிறேன். உம்மிடம் குற்றஞ்செய்ததன்பயனாக என் சிற்ப வன்மையைக் காட்டுகிறேன்' என்றான்.

அரசனுஞ்சந்தோஷமுற்றான், அப்பால் சிற்பி தாரகாரியாய் விளங்கும் முருகனுக்கோர் அழகிய ஆலயமமைத்தான். அதனுள்,

देवसेनालवल्यादियुतं केकिस्थितं गुहम् ।
अखण्डैकशिलायान्तु चकाराशु सशिल्पिजः ॥

வல்லீ தெய்வசேனையுடன் மயிலில் வீற்றிருக்கும் குஹனை ஒரே கல்லினாலமைத்தான். ஸோமவர்மாவும் நந்திகேசனை ஒரே சிலையினாற் செய்தான். பிறகு அரசனை அழைத்து வந்து 'அரசே! என் ஸாமர்த்தியத்தை இப்பொழுது பாரும்,

अस्मिन् वृषभपाश्चात्यभागे नीरेण भेकक: ।
तिष्ठतीति तदा टङ्कं गृहीत्वा समताडयत् ॥
तदा प्रभृतिवृद्धिश्च नन्दिकेशस्य कुण्टिता ।

'இவ்விருஷபத்தின் பின் பக்கத்திலுள்ளே ஓர் தவளை தண்ணீருடனிருக்கிறது' என்றுரைத்து, தன் கையிலுள்ள உளியினால் சந்தனம் பூசி ஈரமாயுள்ள, அதன்மேல் அடிக்கவே உடனே அதில் நின்றும் ஓர் தவளை வெளியே பாய்ந்து நடேசரின் மேல் பாதத்திற்குதித்தது. அச்சிவாலயத்தில் அந்த தீர்த்தத்திற்குப் பேகதீர்த்தம் ( भेकतीर्थ ) எனப்பெயர் ஏற்பட்டது. அதுமுதல் அந்நந்தியும் வளருவது நின்றுவிட்டது.

அதன்பிறகு அகோராரின் முன்பாகத்திற்குத் தெற்கேயுள்ள மற்றோர் பெரிய நந்தியையும், என்றும் நினைத்தவைகளை அளிக்க வல்லவரும், மழை, மழையின்மை இரண்டையுமுண்டாக்குவோரும், ஜ்வரத்தை நீக்குகின்றவருமான அகோரரையும், இருபத்தைந்து மூர்த்திகளையும், பிருஹதீச லிங்கத்திற்கேற்றவாறு ஒரு பெரிய ஸோமாஸ்கந்தரையும், அதன் வடதிசையிற் பாவத்தை நீக்குமோர் அழகிய குளத்தையும், கோபுரசிகரத்தில் நந்திகேசர் முதலிய எட்டுப் பெயர்களையும், பலவணிகளாலும் அழகிய பிராகாரங்களிலுள்ள விருஷபங்களையும் மிக்கக்களிப்புடன் செய்துமுடித்தான்.

அப்பால் இதனையரசனிடம் அறிவிக்கவே அவன் அச்சிற்ப கௌசலத்தைக்கண்ணுற்று மிக்கவாச்சர்யமடைந்து ஸாக்ஷாத் கைலாஸமே இப்புவியிற்றோன்றியதாகக் கருதலானான்.

சோழமன்னன் ஸோமவர்மாவுக்கு தங்கப்பல்லக்களித்து கனகாபிஷேகஞ்செய்வித்து வஸ்திராபரணங்களால் அழகுபெறச் செய்து அவனையும் அவனருமைமகனாகிய பாலசிற்பியையும் யானை மீதேற்றி வாத்தியகோஷங்களுடனூர்வலம் வரச்செய்தான். ரத்தினம்பதித்த தங்கவளைகள், தோடாக்கள், ஹாரங்கள் இவைகளை மற்ற சிற்பிகளுக்கும் வெகுமதியாகவளித்து அவர்களெல்லோருக்கும் அறுசுவைவாய்ந்த அன்னமிட்டான்.

नाम्ना चोलपुरं कृत्वा तस्मै चोलोऽपि दत्तवान् ।

சோழபுரமென்னும் ஊரையும் அவனுக்குக் கட்டிக்கொடுத்தான். அச்சிற்பியும் வேந்தன் கொடுத்த பொருள்களைக்கொண்டு காவேரியின் வடகரையில் கைலாஸநாதர் என்னும் லிங்கத்திற்கு ஓர் ஆலயங்கட்டுவித்தான்.

கரிகாலன் தன்னுசாரனாகிய ஹரதத்தரையும் ஆங்காங்கு தேசங்களிலுள்ளவர்களும் சிவாகமங்களிற் றேர்ந்தவர்களுமான சிவார்ச்சகர்களையும் அழைத்துவந்து கும்பாபிஷேகத்திற்கு வேண்டியவைகளைச் சேகரித்தான். தக்ஷக்கணக்கான பிராமணர்களையழைத்துவந்து குண்டமண்டபங்களையெல்லாம் நிர்மாணஞ்செய்து பஞ்சநதத்திலிருந்து (திருவையாறு) வந்த சிவத்விஜர்களைக் கொண்டு மகுடாகமத்திற்சொல்லியவாறு பிருஹநீசருக்குக்கும்பாபிஷேகத்தை நடத்தத்தொடங்கினான். மஹாபிஷேகவிதிப்படி சங்கரனைப் பூஜித்தும்வந்தான்.

(தொடரும்.) என். வைத்தினாதசாஸ்திரி,
சரஸ்வதிமஹால் தஞ்சை.

---

## ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு
# ஸ்ரீ வ்யாஸபூஜா மஹோத்ஸவம்.

சென்ற பத்துமாதகாலமாக ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகள் பக்தர்களுக்கு அநுக்ரஹம் செய்துகொண்டு தென்னாற்காடுஜில்லாவில் விஜயம்செய்துவருவதை நேயரறிவர். பொதுவாக ஷை ஜில்லாவிலும் சிறப்பாக கள்ளக்குறிச்சிதாலூகாவிலும் நவநாகரீகம்

அதிகத்தாண்டவம் புரியாததால் ஒருஜாதியை மற்றவர் எதிர்க்கும் கிளர்ச்சியும் அதிகம் காணப்படவில்லை. ஆதலால்தான்போலும் ஸ்ரீமஹாஸ்வாமிகள் தனது பூதவுடல் ஊர்தவராமல் கிராமப்ரதக்ஷிணம் செய்வதாலும் மற்றும் சில கடினநியமங்களாலும் இளைத்திருக்கும் பல பெரியார்கள் இவ்வளவு கஷ்டம் கொடுக்கலாகாது என வேண்டியும், எதையுங்கவனியாது ப்ரதிக்ராமம்சென்று பக்தகோடிகளை அநுக்ரஹம் செய்துவருகிறார்கள். மறைபொருளாக தேசாபிமானம்பற்றி தனது ஜில்லாவை அடியேன் புகழ்வதாக எவருள்ளத்திலும் எண்ணமுதிக்காவண்ணம் ஷை ஜில்லாவில் நடந்தவொரு ஸம்பவத்தை எழுதுகிறேன். ஸ்ரீமஹாஸ்வாமிகள் தண்டலம் என்ற ஊரிலிருக்கும்போது ஓர் இடையன் (யாதவன்) ஸ்ரீஸ்வாமிகளைத்தர்சித்து ப்ரஸாதம்பெற்று பிறகும் விலகி ஏதோ ஸன்னிதானத்தில் விக்ஞாபனம்செய்ய விருப்பமுள்ளவன்போல் காணப்பட்டான். எல்லோருள்ளத்தையும் எளிதில் அறியும் ஆற்றல்பெற்ற ஸ்ரீமதாசார்யாள் தக்கவர்மூலம் அதை விசாரிக்க, ‘இவ்வேழையினிடமிருந்தும் ஸ்வாமி ஓர்பிக்ஷையைப்பெற்றுக்கொள்ள வேண்டும்’ என்றான். அவனது பக்திக்கு வியந்து ஓர் பிக்ஷைக்கு ஆகும் செலவென்ன என விளக்கப்பட்டது. ஆயினும் ஆவலுடன் அதைப் பூர்த்திசெய்ய ஸித்தமாயிருந்தான். உனக்கேது தனம்? என வினவ, தானொரு ரெட்டியாரிடம் மாடுமேய்த்ததாகவும் காடு வெட்டி சீர்திருத்தியகாலத்தில் கொஞ்சம் நஞ்சையும் புஞ்சையும் அவராலளிக்கப்பட்டதாகவும் நல்ல நிலமான நஞ்சையைவிற்று பிக்ஷயளிப்பதாகக்கூறினான். ஏழைகளிடம் எவ்வளவு இரக்கம் கொண்டவர் என்பதை நேயரறிவர். குடும்பியான ஏழைபொருளை ஏற்பதில்லை என எவ்வளவு மறுத்தும் அவன் விட்டபாடில்லை. யோசிப்போம், கள்ளக்குறிச்சி போய்வருகிறோமென ஸ்ரீஸ்வாமிகள் பிரயாணமானார். அதற்குள் ஒருவரிடம் க்ரயங்கூறி பணம் நாளைக்கு வருமென அறிந்து ஸ்ரீஸ்வாமிகள் குறிப்பிட்ட இடத்தில் இறங்குவதற்குள் தனக்கு நிலத்தைப்பெற்று தனமளிப்பதாக ஒருவர் சொன்ன ஸந்தோஷத்தை அறிவிக்க முன்வந்தான். அவனது ஆவலை அடக்கமுடியாதென அறிந்த ஸ்ரீமதாசார்யாள் அவனிஷ்டத்தைப் பூர்த்திசெய்தாள். மேலும் புறப்படும்போது பூர்ண அநுக்ரஹத்தைப்பெற்ற அவன் ‘சாமி ஏழைப்பணத்தை உண்ணேனே என்று கவலை வேண்டாம், மனசு நிம்மதியா போங்க, ஆண்டவன் என்னைக்காப்பான்’ என்றான். இது அவ

னுடைய அவ்பாஜபக்தியைக் காட்டுவதன்றோ ! இத்தர்மஸங்கட மான நிலையில் தர்மத்தைச்செய்ய எல்லாம் வல்ல இறைவனை ஏற் றவன். ஸ்ரீஸ்வாமிகள் தாசில்தாரரையழைத்து இன்று மாலைக்குள் புரம்போக்குநிலத்தில் நல்லதாக நாலுகாணி இப்பக்தன்மீது பட்டாசெய்யவேண்டுமென்றார். அவரும் உடனே அப்படிச்செய் தார். ஸ்தாலீபுலாக நியாயமாக ஒன்றைக்கூறினேன்.

சாதுர்மாஸ்யத்தை நடத்த பல இடங்களைக் குறித்தோம். ஆனால் மணலூர்பேட்டையே பாக்யஞ்செய்தது எனலாம். அதன் அருகில் ஜம்பை முதலிய 3-க்ஷேத்ரங்களிருக்கின்றன. எட்டு திருச்சிரபலமுள்ளதாக தர்மசாஸ்திரத்தில் கூறப்படும் தக்ஷிண பினாகினி என்னும் அழகிய நதியின் ஊற்றுப்பெருக்கும் அமல மான ஜலமும் எவருள்ளத்தையுங் கொள்ளைகொள்ளும். க்ரமமாக காலைபூஜை முடித்து மூன்றுக்ஷேத்ரங்களுக்கும் சென்று தீக்ஷை பெற்று சிவன்கோவிலில் ஸ்ரீவ்யாஸபூஜைக்கமர்ந்தனர். மஹா ஜனங்களது உத்ஸாஹத்திற்கு அளவேயில்லை. ஆஸ்தானவித்வான் களனைவரும் பக்தர் பலரும் சூழ பூஜை வெகுசிறப்பாக நடந்தது. உள்ளூர்வாஸிகள் ஊக்கத்துடனும் உத்ஸாஹத்துடனும் தனது கடமையைச் செய்யத்தவறவில்லை. பல வித்வான்கள் இப்பூஜை யின் தத்துவத்தை விளக்கி உபன்யஸித்தனர். கட்டுக்கடங்காத மா பெருங்கூட்டத்தில் ஒருசிலரே உபன்யாஸப்பயனைப்பெற்றனர். மாலை 5-மணிக்கு பக்தர்களுக்கு தீர்த்தப்ரஸாதமும் வ்யாஸப்ரஸா தமும் வழங்கப்பட்டது. மறுநாள் பற்பல பண்டிதர்கள் வாக்யார்த் தங்கூறினர். கிரமப்படி பண்டிதஸம்மானம், பிராமணஸந்தர்ப்பணை முதலியன நடைபெற்றன. இவ்வேழை கர்னாடகவூரில் இவ்வளவு நடந்தது மிகமிகச் சிறப்பெனத்தகும். சற்றேறக்குறைய ஒரு மாதமாகியும் மஹாஜனங்கள் ஊக்கத்துடன் ஸ்ரீமடத்திற்குச்செலவு வைக்கக்கூடாதென தங்கள் சக்திக்கேற்றபடி பிக்ஷைசெய்து வருகிறார்கள்.

வைச்யவகுப்பைச்சார்ந்த ஒருவர் காசி முதலிய க்ஷேத்திர யாத்ரைசெய்து தனது சொந்தச்செலவில் அக்ரஹாரத்தில் சிவன் கோவிலுக்கு எதிரில் 5,000 ரூபாய் செலவுசெய்து ஓர் அழகிய மாணிக்கவாசகஸ்வாமிமடம் கட்டிவைத்திருக்கிறார். த்வாதசி தோறும் பன்னிரண்டு த்விஜஸமாராதனம் செய்துவைக்கிறார். சிவத்விஜர்களைக்கொண்டு மாணிக்கவாசகஸ்வாமிபூஜை அங்கு நடத்திவருகிறார். அவர் புண்யவிசேஷத்தால் அவ்வூரைப்போல

அம்மடமும் ஸ்ரீமதாசார்யாள் பூஜையால் பாவனமானது. மத்ரா ப்ராந்தீயப்ராம்மணஸபை, அமரகலாவிலாஸினீஸபை இவற்றின் அங்கத்தினர்களில் அநேகர் ஒன்றுகூடி ஸ்ரீபகவத்பாதாளை தரிசித்து, சென்னைக்கு விரைவில் விஜயம்செய்யுமாறு விக்ஞாபித்துக் கொள்ள, அடியேனுடனங்கு சென்றனர். க்ரமமாக ஸ்ரீஸ்வாமி தர்சனம்செய்து பூஜாகாலத்தில்ஸ்ரீருத்ரசமகஉபநிஷத்பாராயணம் செய்தனர். உத்தியோகஸ்தர்கள் ஒழுங்காக வேதமோதியதைக் கண்டு ஆச்சரியப்படாதவரில்லை. இவர்களனைவரும் பஞ்சாயதந பூஜையுடன் வந்து பகவதாராதனம் செய்யும்போது அனைவரும் ஆச்சர்யமடைந்தனர். ஸ்ரீஜகதாசார்யாளது கடாக்ஷ அமிருதம் இவர்கள்பால் சிந்தித்தெனலாம். மாயவரம் நியமாத்யயநபாடசாலை மாணவர்கள் தங்களது தண்டமௌஞ்சிகிருஷ்ணாஜிநபிருதுகளுடன் உருவெடுத்த பிரும்மசர்யாச்ரமம்போல் விளங்கினார்கள். அன்று மாலை மஹாஜனங்களின் வேண்டுகோளுக்கிணங்கி பிரும்மசர்யம் என்பதைப்பற்றி உபன்யஸிக்கும்படி அடியேனுக்கு ஆக்ஞையாயிற்று. க்ரமமாக அதை அறிந்தவரைக்கூறி ஸ்ரீமதாசார்யாள் மஹிமையையும் நமது கடமையையும் என் ஜில்லாவாஸிகளுக்கு எடுத்துரைத்தல் அவச்யமெனக் கருதினேன். ஸ்ரீமதாசார்யாள் ஆதிபகவத்பாதாளின் அவதாரமென்றும் அவாள் செய்துவரும் அபூர்வமான வேலையையும் அவர்களது அமாநுஷ சக்தியையும், ஸர்வக்ஞபாவத்தையும் வெளியிடும்போது பலர் கண்ணில் ஆநந்தபாஷ்பம் தோன்றிற்று. பலர் பரவசமாயினர். பின்னர் ஸ்ரீமதாசார்யாள் அநுக்ரஹம் செய்து ப்ரஸாதமளித்து எங்கள் பிரார்த்தனையை ஏற்றனர்.

அங்கு கண்ட ஷெ உபன்யாஸத்தில் குறிப்பிட்ட ஓர் அபூர்வவிஷயத்தை ஆர்யதர்மம் நேயர்களும் அனுபவிக்கும்படி கூறிமுடித்தல் அவச்யம். ஓர் நாய் ஐந்தாறுவருஷகாலமாக மடத்திற்கு எங்கிருந்தோ எவரது தூண்டுதலுமில்லாமல் வந்துசேர்ந்தது. அது அசுத்தவஸ்துக்களையும்எச்சலிலைகளையுந்தொடுவதில்லை. எதிரில் எது இருந்தாலும் உத்திரவின்றி தொடுவதில்லை. பூஜா காலத்தில் தான் கண்ணில் படாமல் தூரநிற்பதோடு தன் இனத்தையும் அங்கு வராமல் தடுக்கும். இதர மாடுகள் வந்து மடத்து வைக்கலைத் தின்னாமல்காக்கும். ஸ்ரீமதாசார்யாளுக்காகப்போடப்பட்ட ஊற்றினருகில் எவரும் வரலாகாது. கல்லெரிந்த ஒருவனைக்

கடித்த குற்றத்திற்காக கண்ணைக்கட்டி 25-மைல் தூரத்திலுள்ள ஓர்கிராமத்தில் கட்டிவிட்டுவரும்படி கடினசிக்ஷையிடப்பட்டதாம். கயிற்றைப் பல்லால் கடித்து, கொண்டுவிட்டவன் வருவதற்குமுன் இது ஸ்ரீமடம் சென்றவிடத்திற்கு வந்துசேர்ந்ததாம். ஆகலால் இதன் உத்தமகைங்கர்யத்தைக்கொண்டு முன்ஜன்மஸம்ஸ்காரத்தை ஊஹிக்கலாமன்றோ? இன்னும் ஒருமாதம் அங்கு ஸ்ரீமடம் தங்குமாதலால் தர்சித்து அனைவரும் ஜன்மஸாபல்யமடைவாராக.

---

## மாதர்களின் கண்டனக் கூட்டம்.

விவாஹவயது மசோதாக்களுக்குப் பெண்மக்கள் பரம அநுகூலமாயிருப்பதாக இரண்டொரு ஆங்கிலங் கற்று நவநாகரீகத்தில் ஈடுபட்ட பெண்கள் 4-பேர்சேர்ந்து பெரிய பெண்மக்கள் கூட்டம்கூடி சட்டத்தை ஆதரித்ததென பத்திரிகைகளுக்கு எழுதுவர். பஞ்சமர் பெண்மக்கள்போன்றவர்களை உத்தாரணஞ் செய்ய அவதரித்ததாகக் கூறும் தேசியபத்திரிகைகள் பெரிய எழுத்தில் பிரமாதமாக எழுதி விடும். வைஸிராயிடமும் பெண்கள் தூதுசென்று சட்டத்தைஆதரிக்கும்படி கோரியதை நேயரறிவர். இவ்வெண்ணத்தை நீக்கவைதிகப்பெண்மக்கள் கூட்டம் கூடுவதும், பேசுவதும் அவச்யமானாலும் அது அஸாத்யமன்றோ! ஆயினும் மத்ரப்ராந்தீய ப்ராம்மணஸபைக் கார்யதர்சியின் வேண்டுகோளுக்கிணங்கி ஷை வைதிக ஸ்திரீகளின் கூட்டம் ஒன்று சென்ற வாரம் புதனன்று மாலை 5-மணிக்கு தம்புசெட்டி வீதி ஸ்ரீ சங்கராசார்ய மடத்தில் கூடியது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் ஷை சட்டவிஷயமாக எவ்வளவு முயற்சிசெய்துவருகிறார்கள் என்பதை எவருமறிவர். ஆதலால் இடவசதி, விளக்கு, மற்ற ஸஹாயங்கள் சுமங்கலிகளுக்கு மஞ்சள் குங்குமம் புஷ்பம் முதலியன இம்மடத்தின் மானேஜரால் ஆதரவுடன் அளிக்கப்பட்டது.

ஹைகோர்ட்டு வக்கீலாயிருந்தும் அழகாகக் காலக்ஷேபம் செய்தவரும், வைதிகதர்மத்தைப் பூர்ணமாகக் கடைபிடித்தவருமான காலஞ்சென்ற வெங்கிடசுப்பையர் அவர்களின் புதல்வியும், ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் நாகேச்வரசாஸ்திரிகளின் தர்மபத்தினியும், வடமொழியில் பாண்டித்யமுள்ளவளும், உலக

விருத்தாந்தமறிந்தவளுமானமாதுஸ்ரீ பட்டம்மாள் இந்த கூட்டத்தைக் கூட்டுவதற்குக் காரணமாயிருந்ததோடு மற்றும் பல கூட்டங்களையுங் கூட்டி ஷை மசோதாவினால் வரும் அபாயங்களை எடுத்து உபன்யஸித்துவருகிறார்.

ஸ்ரீசங்கர மடத்தில் நடந்த ஸபையில் மாதுஸ்ரீ எம். லக்ஷ்மி அம்மாள் தலைமை வஹித்தார். ஸ்ரீபட்டம்மாள் இச்சட்டம் கொண்டுவந்தவர் கூறும் காரணங்களைக் காட்டி அதற்குத் தக்க பதிலளித்து இதை விசாரிக்க ஏற்பட்ட கூட்டத்தார் ஒருதலைப்பக்ஷமாக நடந்ததையும் அவர்கள் விசாரிப்பதற்குமுன்னமே கொண்ட தீர்மானத்தையும் அதையே சிபார்சாக அனுப்பியதையும் விளக்கி அதைக்கண்டித்து அரசாங்கத்தின் கடமையைக் காட்டி நீண்ட நேரம் உபன்யஸித்தாள். கண்டன தீர்மானம் எல்லோராலும் ஏகமனதாக ஏற்கப்பட்டது. ராஜப் பிரதிநிதிக்கும் ஸபைத் தலைவருக்கும் அது அனுப்பப்பட்டது.

## மற்றோர் கூட்டம்.

அடியேனது பிரார்த்தனைக் கிணங்கி வரலக்ஷ்மீவ்ரதத்தன்று மாலை சாந்தாசிரமத்தில் வைதிககுலஸ்திரீகள் மஹாநாடு ஒன்று நடந்தது. பல கையெழுத்துக்கள் வாங்கப்பட்டன. தங்களது பெயரைப் பிரசுரப்படுத்த அவர்கள் விரும்பவில்லையானாலும் தற்கால ஆபத்தான நிலையைக் கருதி பலர் கையெழுத்திட்டனர். உபன்யாஸம் செய்யும் பழக்கமில்லையாதலால் அடியேனெழுதிக் கொடுத்த விஷயத்தைக் கூறி தீர்மானத்தை நிறைவேற்றினர். ஆங்காங்கு அதேபோல் பலர் கூடி தந்தியனுப்பின் தூதுசெல்லும் ஸமயத்தில் உபகாரமாயிருக்கும். இச்சமயம் விடாமுயற்சியுடன் அன்பர் முன்வர வேண்டுகோள்.

## வைதிக ஸேவக ஸபா.

மாணவர்களைக்கொண்டு 5, 6 ஆண்டிற்குமுன் இது என்னால் துவக்கப்பட்டது. 'ஸ்கௌட்' எனும் சாரணசங்கத்தில் மாணவர்களைச்சேர்த்து தனியான வேஷமிட்டு வைதிகாசாரத்தைக்குலைக்க ஒவ்வொரு ஆங்கிலகலாசாலையிலும் ஓரியக்கம் உண்டென அனைவருமறிவர். அதுபோலல்லாது மாணவர்களை வைதிகாசாரத்துடன் நல்வழிபடுத்துவதே முன்னோக்கமாயிருந்தது. தற்சமயம் விவாஹவயதுமசோதாபோன்ற பல வேண்டாத சட்டங்கள் தோன்றுவதாலும் இனி இதைவிட கேவலமான பல சட்டங்கள்

தோன்றலாமாதலாலும் ஸாத்விகவகையில் இவைகளை எதிர்க்க இப்பெயருடன் மதாபிமானங்கொண்ட பெரியோர்களைச் சாரணராக சேர்க்க தீர்மானித்தோம். ஸ்வஸ்வதர்மந்தவறாமல் அநுஷ்டிப்பதே இதில்சேர முதல் யோக்யதை. இதுவரை நாம் செய்த கண்டனங்களை லக்ஷ்யம் செய்யாமல் பதினைபிரக்கணக்கான கையெழுத்துகளை மதிக்காமல் அகிலபாரதவர்ஷீய ப்ராம்மணமஹாஸபை கார்யதர்சிகள் தூது சென்றபோது சீர்திருத்தத்திற்கு அரசாங்கம் எதிராயிருப்பதாக பார்லிமெண்டில் ஓர் அபிப்பிராயம் இருப்பதால்வ்வித எண்ணத்திற்கு இனி இந்தியகவர்ன்மெண்ட் இடங்கொடுக்காமலிருக்க உத்தேசம் என ராஜப்ரதிநிதி, நிர்வாஹஸப்யர் கனம் கொரார் சொல்லிவிட்டார். இதிலிருந்து நேராகவோ மாறுகவோ அரசாங்கம் இதுபோன்ற சட்டத்தை ஆதரிக்குமென தெரிகிறது. இச்சட்டம் பாலாகுமாறனல் தெய்வீகச்சட்டமான நமதாசாரத்தைக் கைப்பற்றியதற்காக தாய், தந்தை, மாமன், மாமி, புரோகிதரும்கூட திருடனைப்போல் 6மாத ஜெயில்சிக்ஷையும் ஆயிரம்ரூபாய் அபராதமும் விதிக்கப்படுவர். ஆதலால் நாம் வேண்டாத இவ்வநுசாரசட்டத்தை எதிர்த்து மீறுவதென இச்சபை தீர்மானித்திருக்கிறது. இதனல் உண்டாகும் கஷ்டங்களை ஸஹித்து மதகைங்கரியம்புரிய தைரியமிருப்பது இரண்டாவது யோக்யதை. இதைத்தவிர வேறுவகையில்லாததால் இம்முடிவிற்கு வந்தோம். இதுவரை தக்க பெரிய மனிதர்கள் உத்ஸாஹமூட்டி தாங்களும் சேருவதாக வாக்களித்திருக்கின்றனர். இச்சமயத்தில் எதிர்த்துநிற்காவிடில் இனி நாம் வைதிகவழிபபடி வாழமுடியாது. ஸமீபத்தில் மிகப்ரபலகனவான்கள் கூடி ஓர் தூது செல்கின்றனர். இவைகளால் பரிஹாரமேற்படாவிடில் தான் சேனைமுன் நாம் நிற்கநேரும். நமது துரோண, கிருப, அச்வத்தாமாதி வீரபுருஷர்களை நினைக்கும் காலம் வந்துவிட்டது. ராஜ்யத்திற்கல்ல யுத்தமுழக்கம், போகத்திற்குமல்ல, நமது தர்மாநுஷ்டானத்தைக்காக்க

धर्मशास्त्ररथारूढाः वेदखड्गधराः द्विजाः ।

தர்மசாஸ்திரத்தேரிலேறி வேதக்கறியை ஏந்திய த்விஜர்கள் என்றபடி போர்கோலம் கொள்ளும் காலம்போலுமிது. ஆதலால் இதில் தைர்யமுள்ளோர் தத்தம் பெயரை 154, தம்புசெட்டிவீதி சென்னைக்குத் தெரிவிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீவத்ஸ, வே, ஸோமதேவசர்மா,